இலங்கை திட்டமிடல் சேவையில் தரம் I இன் பதவிகளை வகிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும்

**<u>இலங்கை திட்டமிடல் சேவையில் தரம் I இன் வெற்றிடங்களுக்கு ஏற்கனவே தரம் I இன் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களில் இருந்து பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமித்தல்</u>**

11.10.2023 ஆம் திகதிய பொதுச் சேவை ஆணைக்குழுவின் 04/2023 சுற்றறிக்கையின் இடைக்கால ஏற்பாடுகளின்படி, தரம் I இன் வெற்றிடங்களுக்காக தரம் I இற்குப் பதவி உயர்த்துவதற்கு ஏற்கனவே தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களில் இருந்து பொருத்தமான உத்தியோகத்தர்களைத் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

02. இதன்படி, பதவி வெற்றிடங்களுக்கு இலங்கை திட்டமிடல் சேவையில் ஏற்கனவே, தரம் I இன் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களால் விண்ணப்பிக்கப்படுமாயின், அதற்கான கோரிக்கைகளை 2024.02.02 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களுடன் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

I. உத்தியோகத்தரின் கோரிக்கை கடிதம்
II. இடமாற்றம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் நிறுவனத் தலைவரின் ஒப்புதல்
III. உத்தியோகத்தரை விடுவிப்பது தொடர்பான நிறுவனத் தலைவரின் பரிந்துரை
IV. தற்போது வகிக்கும் தரம் I இன் பதவிக்குரிய முறையான நியமனக்கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
V. EST 12 படிவம்

03. ஏற்கனவே தரம் I இன் பதவிகளை வகிக்கும் உத்தியேகத்தர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்வதோடு 2024.02.02 ஆம் திகதியின்

பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : 2024.01.16

ஒப்பம்./ பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**<u>பொதுச்சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 04/2023 இன்படி</u>**

**<u>இலங்கை திட்டமிடல் சேவை தரம் I இன் பதவி வெற்றிடங்களின் பட்டியல்</u>**

| தொடர் இலக்கம் | நிறுவனம் |
|---|---|
| 1 | நீர்ப்பாசன அமைச்சு |
| 2 | தொழில்நுட்பவியல் அமைச்சு |
| 3 | வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு |
| 4 | நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியகொள்கைகள் அமைச்சு |
| 5 | தகவல் தொழிநுட்ப முகாமைத்துவப் திணைக்களம் |
| 6 | வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் |
| 7 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் |
| 8 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் |
| 9 | நிதி ஆணைக்குழு |
| 10 | வடக்கு , கிழக்கு அபிவிருத்திக்கான செயலணி |
| 11 | தேர்தல்கள் ஆணைக்குழு |
| 12 | மேல் மாகாண சபை |
| 13 | வட மத்திய மாகாண சபை |
| 14 | வடமேல் மாகாண சபை |
| 15 | ஊவா மாகாண சபை |